# அழகப்பா பல்கலைக்கழகம்

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்று மதிப்பீட்டில் A+ (CGPA:3.64) தகுதி பெற்றது)

**காரைக்குடி – 630 003**

---

நாள்: 30.11.2018

காரைக்குடி, அழகப்பா பல்கலைக்கழக கல்வியியல் கல்லூரி சார்பில் "மனநலம் மற்றும் ஆரோக்கியத்தில் மனவெழுச்சி சவால்கள்" என்ற தலைப்பில் ஒரு நாள் ஒருங்கிணைத்தல் நிகழ்ச்சி 28.11.2018 – அன்று பல்கலைக்கழக கருத்தரங்க அறையில் நடைபெற்றது. கல்வியியல் கல்லூரி முதல்வர் (பொ) முனைவர் அ.பாலு அனைவரையும் வரவேற்றார்.




இந்நிகழ்ச்சிக்கு தலைமையேற்று உரை நிகழ்த்திய அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் பேரா.நா.இராஜேந்திரன் அவர்கள் மனநலம் மற்றும் ஆரோக்கியத்தின் இன்றியமையாமை குறித்து எடுத்துரைத்தார். ஆசிரியர்கள் எப்பொழுதும் மாணவர்களிடம் அன்பாக நடந்து கொள்ள வேண்டும். அவர்களது பிரச்சனைகளை தெரிந்து கொண்டு அவற்றிலிருந்து விடுபடுவதற்கு வழிகாட்ட வேண்டும். ஆசிரியர்கள் பாடம் நடத்தும்போது பாடம் தொடர்பான படங்கள் மூலம் விளக்கி அவர்களுக்கு எளிதில் புரியும்படி கற்பிக்க வேண்டும். எப்போதும் மாணவர்கள் மனஇறுக்கம் இல்லாமல் மன மகிழ்வுடன் இருப்பதற்கு ஆசிரியர்கள் உதவி புரிய வேண்டும். மாணவர்களுக்கு எதில் ஆர்வம் அதிகம் உள்ளது என்பதை தெரிந்துகொண்டு அதற்கேற்றாற்போல் அவர்களை ஊக்குவிக்கவேண்டும். மேலும் மாணவர்கள் வாழ்க்கையை சிறப்பாக அமைத்துக்கொள்ள தொழிட்நுட்ப அறிவோடு சமூகவியல் சார்ந்த அறிவினையும் பெறுவதற்கு ஆசிரியர்கள் துணைபுரிய வேண்டும் என்றார்.

விழாவில் கல்வியியல் புல முதன்மையர் பேரா.பூ.தர்மலிங்கம் வாழ்த்துரை வழங்கினார். அவர் தமது உரையில் மனிதனின் ஆரோக்கியம் உடல்நலத்துடன் மனநலத்தையும் சார்ந்தது எனக் குறிப்பிட்டார். அழகப்பா பல்கலைக்கழக மருத்துவ அலுவலர் டாக்டர்.ஆர்.ஆனந்தி அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

நிகழ்ச்சியை தொடர்ந்து நடந்த அமர்வுகளில் டாக்டர் ஆர்.ஆனந்தி, கல்வியியல் கல்லூரி உதவி பேராசிரியர்கள் முனைவர் எம்.பரிமளா பாத்திமா, முனைவர் சு.போர்சியா மற்றும் அப்போலோ மருத்துவமனை மருத்துவர் லாயிட்ஸ் ஆகியோர் குழந்தைப்பருவ மனநல பாதிப்புகள், மனவெழுச்சி பிரச்சினைகள், மனஅழுத்த மேலாண்மை, மனநல ஆலோசனை என்ற தலைப்புகளில் கருத்துரைகளை வழங்கினர்.

பேரா.ஹா.குருமல்லேஷ் பிரபு
பதிவாளர்